செ.வெ.எண் : 550 20/9/2012

# செய்திக்குறிப்பு

## இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறை

2012 – 2013ஆம் ஆண்டுக்கான தமிழ் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையில் “சென்னை, வேலூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் சுழற்சி முறையில் துறை சார்ந்த வல்லுநர்களை அழைத்து ஆர்வமுள்ள இளம் எழுத்தாளர்களுக்கு கவிதை, கட்டுரைப் பயிற்சியும், பேச்சாளர்களுக்குப் பேச்சுப் பயிற்சியும் ஒரு வார காலத்திற்கு அளிக்கப்படும்” என அறிவித்ததற்கிணங்க இத்திட்டம் இவ்வாண்டு திருச்சிராப்பள்ளி மாவட்டம் திருவரங்கத்தில் உள்ள ஸ்ரீயோக திருமண அரங்கில் 22.09.2012 முதல் 28.09.2012 வரை நடைபெறவுள்ளது. இப்பயிற்சியில் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் சுமார் 100 கல்லூரி மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். இப்பயிற்சியில் கவிதை, கட்டுரை, பேச்சு, நாடகம், மொழிபெயர்ப்பு, நிகழ்ச்சி தொகுப்பாளர் , வர்ணணை , கணினி தமிழ், அறிவியல் தமிழ், பிழையில்லாமல் எழுதுதல், நாட்டுப்புற இலக்கியம், மொழிப் பயிற்சி போன்ற பல்வேறு தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்படவுள்ளது. இவர்களுக்கு பயிற்சி அளிக்க 50 வல்லுநர்கள் வருகை தரவுள்ளனர். இப்பயிற்சியினை மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் 22.09.2012 அன்று காலை 10.00 மணிக்கு தொடங்கிவைக்கவுள்ளார். இப்பயிற்சியில் கலந்து கொள்ளும் பயிற்சியாளர்களுக்கு தங்குமிடம், உணவு, இருவழி போக்குவரத்துக் கட்டணம் ஆகியன அரசு செலவில் வழங்கப்படவுள்ளன.

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

தமிழ் வளர்ச்சி இயக்குநர்.

# இளந்தமிழர் இலக்கியப் பட்டறை (22.9.2012-28.9.2012) , திருவரங்கம் , திருச்சிராப்பள்ளி

| நாள் | 10.00–11.00 | | 11.05–12.00 | 12.00–1.00 | | 2.00–3.00 | 3.00–4.00 | | 4.05 –5.00 | 5.00–6.00 | 6.00–7.00 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 22/9/12 | தொடக்க விழா<br>9.30–11.00 | | தற்கால இலக்கியம்<br>முனைவர் ம.திருமலை துணை வேந்தர் | கவிதை<br>கவிஞர் பிறைசூடன் | | கட்டுரை<br>திரு.கு.வெ.பால சுப்பிரமணியம் | சொற்பொழிவு<br>பழ.கருப்பையா சட்டமன்ற உறுப்பினர் | | ஆன்மீகத் தமிழ்<br>முதுமுனைவர் ம.அ.வேங்கட கிருட்டிணன் | தெய்வத் தமிழிசை<br>கலைமாமணி தேனிசைத் தென்றல் தேவா | |
| 23.9.12 | இலக்கியத் திறன்<br>புலவர் இளஞ்செழியன் | | நிகழ்வுத் தொகுப்பு<br>முனைவர் பால இரமணி | கவிதை<br>கவிஞர் தங்கக் காமராசு | | மொழிப்பயிற்சி<br>புலவர் வெற்றியழகன் | தமிழன் வளர்ச்சியில் கணினித் தமிழ்<br>பேரா.ம.கணேசன் | | தமிழ் மருத்துவம்<br>மருத்துவர் கோ.பால கிருஷ்ணன் | புதுக்கவிதை போக்கு<br>கல்பாக்கம் ரேவதி | தமிழிசை<br>திரு.மம்மது |
| 24.9.12 | கணினித் தமிழ்<br>பேரா.முனைவர் க.தெய்வசுந்தரம் | | நாட்டுப்புற இலக்கியம்<br>முனைவர் க.கனகசபை | சித்தர்கள் காட்டும் வாழ்வியல்<br>பேரா.மரு.அ. இராமலிங்கம் | | தமிழும் இசுலாத்தும்<br>முனைவர் சே.மு.மு.முகமதலி | நாவல்களில் தமிழ்ப் பண்பாடு<br>பேரா.பொன் சண்முகம் | | கலைச் சொல்லாக்கம்<br>முனைவர் ந.அருள் | தமிழிலிருந்து ஆங்கிலம்–மொழிபெயர்ப்பு<br>முனைவர் தி.நா.இராமச் சந்திரன். | |
| 25.9.12 | கட்டுரை<br>பேரா.பழனிவேலு | தேநீர் இடைவேளை | சங்க இலக்கியம்<br>பேரா.சேக் மீரான் | அறிவியல் தமிழ்<br>பேரா.வ. கீதா | உணவு இடைவேளை | கவிதை<br>திரு.வசந்தகுமரன் | நகைச்சுவைத்தமிழ்ே<br>பரா.இ.அ.அகமது மரைக்காயர் | தேநீர் இடைவேளை | இசுலாத்தில் காவியத் தமிழ்<br>பேரா.நத்ரஷா | சொற்பொழிவு<br>பேரா.கு.ஞான சம்பந்தன் | அயலகத்தில் தமிழும்– தமிழரும்<br>முனைவர் லலிதா சுந்தரம் |
| 26.9.12 | அன்றாட வாழ்வில் சித்த மருத்துவம்<br>மரு.பாக்கம் தமிழன்(எ) பிரதாபசிம்மன் | | ஆங்கில உரைத் தொகுப்பு கலை<br>பேரா.பால கிருஷ்ணன் | இனித்திடும் தனித்தமிழ்<br>கோ.சந்திர சேகர் திருச்சி வானொலி நிலையம் | | கல்வெட்டுத் தமிழ்<br>முனைவர் சீ..வசந்தி தொல்லியல் துறை ஆணையர்(பொ) | செவ்வியல் இலக்கியம்<br>பேரா. முனைவர் சே.சாரதாம்பாள் | | அறிவியல் தமிழ் தனித்தமிழ்<br>நாக.இளங்கோவன் | மொழிப்பயிற்சி<br>பேரா.கா.மு.பாபுஜி விவேகானந்தா கல்லூரி | |
| 27.9.12 | சொற்பொழிவு<br>முனைவர்..வைகைச் செல்வன் சட்டமன்ற உறுப்பினர் | | கவிதை<br>புலவர் புலமைப் பித்தன் | ஊடகத் தமிழ்<br>முனைவர் சுந்தர ஆவுடை யப்பன் | | தமிழும் கிறித்துவமும்<br>முனைவர் கு.சின்னப்பன் கல்வியியல் துறை | தமிழ்–வேர்ச்சொல்<br>முனைவர்இரா.கு. ஆல்துரை | | நாட்பட்ட நோய்களுக்கு சித்த மருத்துவம்<br>மரு.பழநிச்சாமி | இலக்கியமும் மொழியியலும்<br>பேரா.வீ.ரேணுகா தேவி | பரதக்கலையே–தமிழர்க்கலை<br>பேரா.முனைவர்.பா.ராசா<br>பாவேந்தரின் தமிழிசை<br>பேரா.முனைவர் சு.தமிழ்ச்செல்வி |
| 28.9.12 | சொற்பொழிவு<br>த.மெய்மொழி | | வருணணைத் தமிழ்<br>மரு.சுதா சேசேஷையன் | இணையத்தில் தமிழ் படைப்பாக்கம்<br>தேனி மு.சுப்பிரமணி | | தமிழகச் சிற்பங்களுடன் ஓர் உரையாடல்<br>திரு.பி.சிவராம கிருட்டிணன் கவின்கலை | கவிதை/கலைச் சொல்லாக்கம்<br>கவிஞர் ஏர்வாடி இராதாகிருஷ்ணன் | | நிறைவு விழா | | |